1982 பிப்ரவரி 9] [திரு. எஸ். அரங்கநாதன்]

இருக்குமானால் திருத்திக்கொள்ள முற்படுகிறோம். அதை விட்டு விட்டு பேசியது பத்திரிகைகளிலே வரவேண்டுமென்பதற்காக தூய்மை உள்ளம் படைத்தவனை, நல்ல உள்ளம் படைத்தவனை, நாடு செம்மையாகவேண்டுமென்று தன்னை அர்ப்பணித்து இரவும் பகலும் பாடுபடுகின்றவனை இழிவாக பேசினால் சரியாக இருக்காது. நடிகன் மேல் கல்லெறிந்தவுடனே தலைவர் மேல் அது போகவில்லையா ? உங்களுக்கு எல்லாம் இல்லாத பாசம் எம்.ஜி. ஆருக்கு கலைஞர் மேல் இருக்கிறது. கலைஞர் குடும்பத்தின்மேல் இருக்கிறது. ஆனால் கலைஞருடைய பெயரைச் சொல்லிக் கொண்டு வாழவேண்டுமென்று வைத்துக் கொண்டிருக்கிறீர்கள், உங்கள் பாசம் அது. உண்மையாகவே எதிர்க்கட்சித் தலைவர் மீது பாசம் வைத்திருக்கின்றவர் என்று சொன்னால் அது எம்.ஜி.ஆர். அவர்கள்தானே தவிர, உங்களுக்கு உண்மையிலேயே அந்தப் பாசம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அருமை நண்பர்களைப் பார்த்து நான் கேட்டுக் கொள்கிறேன், இங்கே பேச வேண்டுமென்பதற்காக எதை வேண்டுமானாலும் பேசிக் கொண்டு குறை சொல்லிக் கொண்டிருப்பது என்பது அவ்வளவு சரியாக இல்லை என்பதைக் கூறிக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பு தந்தமைக்காக நன்றி கூறி விடை பெற்றுக் கொள்கிறேன், வணக்கம்.

3. அறிவிப்பு.

பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுகளுக்கிணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப் பட்டுள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10—2—1982 (புதன்)	ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். தொடர்ச்சியும், பதிலுரையும்.
11—2—1982 (வியாழன்) மற்றும் 12—2—1982 (வெள்ளி)	நீதிபதி திரு. பால் கமிஷன் அறிக்கை பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றி 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 2 ஆம் நாள் அன்று பேரவையில் வைக்கப் பெற்ற அறிக்கைமீது விவாதம்.

13—2—1982 (சனி) .. திரு. எம். ஏ. முருகேசன் விசாரணைக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றி 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30 ஆம் நாள் அன்று பேரவை முன் வைக்கப் பெற்ற அறிக்கை மீது விவாதம்.

14—2—1982 (ஞாயிறு). .. விடுமுறை.

15—2—1982 (திங்கள்)
16—2—1982 (செவ்வாய்)
மற்றும்
17—2—1982 (புதன்). } அரசினர் சட்ட முன்வடிவுகள்.

18—2—1982 (வியாழன்) மற்றும்
19—2—1982 (வெள்ளி). } தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1981–82 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீதும் 1980–81 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கையின்மீதும் விவாதம்.

பேரவை வழக்கம்போல் காலை 9 மணிக்குக் கூடும்.

2. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்— (தொடர்ச்சி.)

—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கவர்னர் உரையின்மீது எனக்குப் பேச வாய்ப் பளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். கவர்னர் உரையிலே பாரதியார் விழா தமிழ்விழா கொண்டாடியதைப் பற்றியெல்லாம் மிகச் சிறப்பாகச் சொல்லி யிருக்கிறார்கள். விழா எடுத்ததற்காகத் தமிழக அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.